**மண்முனை மேற்கு பிரதேச சபை – 2015**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 01 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

மண்முனை மேற்கு பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசோட்டத்தினையும், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் X இன் பிரிவு 193 இன் படி ஆண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டிற்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 8,064,362 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 3,170,306 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 4,894,056 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

## 2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

### 2.2.1 மதிப்பிட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், திரண்ட நிலுவை

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருமானம், உள்ளபடியான வருமானம், பெற வேண்டிய திரண்ட நிலுவை என்பவற்றுக்கான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது (ரூபா) | உள்ளபடியானது (ரூபா) | 2015 திசெம்பர் 31இல் பெற வேண்டிய திரண்ட நிலுவை (ரூபா) |
|---|---|---|---|
| வாடகை | 2,417,247 | 2,629,182 | 90,564 |
| தண்டப்பணம் | 2,023,825 | 2,071,615 | 259,655 |
| ஏனைய வருமானங்கள் | 395,865 | 168,071 | 253,143 |

### 2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றிற்கு வீதவரிகள் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாததினால் பிரதேச சபையின் பிரதான வருமான மூலமான இவ்வரிகள் மூலம் கிடைக்க வேண்டிய அண்ணளவான ரூபா 200,000 தொகையை வருடாந்தம் சபை இழந்து வருகின்றது.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 பாதீட்டுக்கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 3% தொடக்கம் 97% வரையான வீச்சுடைய முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

## 4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழ்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக்கட்டுப்பாடு

(இ) வருமான முகாமைத்துவம்